# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


**செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் (Artificial Intelligence - AI) மனிதகுலத்திற்கு ஏற்படும் சவால்களுக்குத் திருச்சபையின் பதிலாக "மகிமைமிகு மனிதகுலம்" (*Magnifica Humanitas*) என்ற தனது புதிய சமூகச் சுற்றுமடலை (Social Encyclical) திருத்தந்தை 14-ஆம் லியோ வெளியிட்டுள்ளார். இந்தத் தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்தவோ, மனிதர்களைப் புறக்கணிக்கவோ அல்லது போருக்கோ பயன்படுத்தப்படாமல், 'ஆயுதமற்றதாக' மாற்றப்பட வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார்.**

## வழிபாட்டுமுறைப் பாரம்பரியமும் புதுப்பித்தலும் நற்செய்தி அறிவிப்பிற்கு வழிகோலுகின்றன

புதன்கிழமைதோறும் நிகழும் தனது பொதுமறை உரையின் போது, திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள், 1963-ஆம் ஆண்டு இரண்டாம் வத்திக்கான் சங்கத்தால் வெளியிடப்பட்ட வழிபாட்டுமுறை பற்றிய 'திருவழிபாடு' (*Sacrosanctum Concilium*) என்னும் கொள்கை ஆவணத்தை ஆழமாகச் சிந்தித்து, திருஅவையின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் வழிபாட்டுமுறையில் வளர்ச்சி அடைவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

கடந்த மே 27 புதன்கிழமை அன்று, புனித பேதுரு சதுக்கத்தில் கூடியிருந்த மக்களிடையே உரையாற்றிய திருத்தந்தை 14-ஆம் லியோ, "நமது பாரம்பரியத்தைப் பாதுகாத்தும், வழிபாட்டுமுறையைப் புதுப்பித்து வளரச் செய்வதும், திருஅவை ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், ஒற்றுமையாய் இருக்கவும், நற்செய்தியை உலகெங்கும் அறிவிக்கும் தனது பணியைத் தொடரவும் வழிவகுக்கிறது" என்று கூறினார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் முதன்முதலில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட ஆவணம் இதுவாகும். இது வழிபாட்டுமுறையில் மிக முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்தது.

- திருப்பலியை மக்கள் பேசும் சொந்த மொழிகளிலேயே (தாய்மொழியில்) கொண்டாட அனுமதித்தது.
- இறைமக்கள் அனைவரும் வழிபாட்டில் வெறும் பார்வையாளர்களாக இல்லாமல், முழுமையாகவும் தீவிரமாகவும் பங்கேற்க ஊக்கமளித்தது.

திருத்தந்தை தனது உரையில், "பல நூற்றாண்டுகளாக வழிபாட்டுமுறையானது நற்செய்தி அறிவிப்பிற்கு ஒரு மிகப்பெரிய ஆற்றலாக இருந்து வருகிறது" என்று சுட்டிக்காட்டினார்.

"இன்று, இந்த ஆற்றலானது கத்தோலிக்கத் திருஅவையின் உண்மையான, வாழ்கின்ற பாரம்பரியத்தோடு இணைந்து புதுப்பிக்கப்பட வேண்டும். அதாவது, விசுவாசிகளை முழுமையான உண்மைக்கு நேராக வழிநடத்தும் ஒரு உந்துசக்தியாக இது மாற வேண்டும்."

இவ்விஷயத்தில், திருப்பலியை முன்னின்று நடத்தும் குருக்களுக்கு (பங்குத்தந்தையர்களுக்கு) திருத்தந்தை ஒரு முக்கிய வேண்டுகோள் விடுத்தார்: "வழிபாட்டுமுறைக்கான நூல்களையும், சட்டதிட்டங்களையும் எப்போதும் மதிக்க வேண்டும். இந்த மதிப்பு கடவுள் மீதுள்ள பற்றுதலிலிருந்தும், திருஅவையோடு கொண்டுள்ள விசுவாசத்திலிருந்தும் வர வேண்டும். கடவுளின் மாட்சிமைக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, திருஅவையின் போதனைகளுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்."

### ஒற்றுமையை வளர்க்கும் வளர்ச்சி

"வழிபாட்டுச் சடங்குகளில் செய்யப்படும் எந்தவொரு மாற்றமும், ஏற்கனவே இருக்கும் வழிபாட்டு வடிவங்களிலிருந்து முறையான வளர்ச்சியாக (Organically) உருவாவதாக இருக்க வேண்டும்." மேலும், திருஅவையின் நன்மைக்காகச் செய்யப்படும் ஒவ்வொரு சீர்திருத்தமும், மிகக் கவனமான 'இறையியல், வரலாறு மற்றும் ஆன்மீக' ஆய்வுகளுக்குப் பின்னரே செய்யப்பட வேண்டும்.

எனவே, விசுவாசிகளிடையே குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று திருஅவையின் தலைமைப் போதகம் கூறுகிறது. "வழிபாட்டு காரியங்களில் யாரும் தங்களுடைய சொந்த விருப்பத்தின் பேரில் எதையும் கூட்டவோ, குறைக்கவோ அல்லது மாற்றவோ கூடாது" என்று திருத்தந்தை எச்சரித்தார்.

"வத்திக்கான் சங்க ஆவணத்தில் கூறப்பட்டுள்ள இந்த வளர்ச்சி, திருஅவையின் கூட்டுறவையும் ஒற்றுமையையும் எந்த வகையிலும் பலவீனப்படுத்தாது; மாறாக, அது நம்மிடையே உள்ள ஒற்றுமையை மேலும் உறுதிப்படுத்தி வளர்க்கவே செய்கிறது" என்று கூறி திருத்தந்தை தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

## செயற்கை நுண்ணறிவை (AI) 'ஆயுதமற்றதாக்க' திருத்தந்தை அழைப்பு!



செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் (Artificial Intelligence - AI) மனிதகுலத்திற்கு ஏற்படும் சவால்களுக்குத் திருச்சபையின் பதிலாக "மகிமைமிகு மனிதகுலம்" (*Magnifica Humanitas*) என்ற தனது புதிய சமூகச் சுற்றுமடலை (Social Encyclical) திருத்தந்தை 14-ஆம் லியோ வெளியிட்டுள்ளார். இந்தத் தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்தவோ, மனிதர்களைப் புறக்கணிக்கவோ அல்லது போருக்கோ பயன்படுத்தப்படாமல், 'ஆயுதமற்றதாக' மாற்றப்பட வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

தொழில்நுட்ப வளர்ச்சி என்பது மனித கண்ணியம், உடன்பிறந்த உறவு மற்றும் பொதுநலனுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று திருத்தந்தை உலகச் சமுதாயத்தை வலியுறுத்தியுள்ளார்.

தனது முதல் சமூகச் சுற்றுமடலை அறிமுகப்படுத்தி, சினோடு அரங்கில் (Synod Hall) கூடியிருந்தவர்களிடம் பேசிய திருத்தந்தை, "தற்போதைய தொழில்நுட்பப் புரட்சி என்பது ஒரு புதிய வரலாற்றுத் திருப்பம்" என்றார். 1891-இல் தொழிற்புரட்சியின் போது திருத்தந்தை 13-ஆம் லியோ எழுதிய புகழ்பெற்ற 'ரேரும் நோவாரும்' (*Rerum Novarum*) சுற்றுமடலைப் போல, இன்றைய காலத்தின் 'புதிய மாற்றங்களை' நற்செய்தியின் ஒளியிலும், மனித கண்ணியத்தின் அடிப்படையிலும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கூறினார்.

"செயற்கை நுண்ணறிவு ஏற்கனவே நம் வாழ்வின் பல பகுதிகளைத் தொட்டுள்ளது. மனிதர்கள் இணைந்து வாழ்வதற்கான முடிவுகளை அது மாற்றியமைக்கிறது; குறிப்பாக, போர் நடத்தப்படும் முறையையே இது கொளரமாக மாற்றிவருகிறது" என்று திருத்தந்தை கவலை தெரிவித்தார்.

விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் அரசியல் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பிறகு இந்தச் சுற்றுமடல் உருவானதாகத் திருத்தந்தை குறிப்பிட்டார். தானியங்கி ஆயுதங்கள் (Autonomous Weapons) மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை (மருத்துவம், வேலைவாய்ப்பு) அநீதியான தரவுகளின் அடிப்படையில் மறுக்கும் கணினி வழிமுறைகள் (Algorithms) குறித்துப் பலரும் கவலைத் தெரிவித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாகவே, "செயற்கை நுண்ணறிவு ஆயுதமற்றதாக்கப்பட வேண்டும்" என்ற வலுவான வார்த்தையைத் திருத்தந்தை பயன்படுத்தியுள்ளார். அணுஆயுதக் குறைப்புக்குத் திருஅவை என்றும் ஆதரவளிப்பது போல, இந்தத் தொழில்நுட்பமும் ஆதிக்கம், புறக்கணிப்பு மற்றும் மரணத்தின் கருவியாக மாறுவதிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றார்.

பெரு நாட்டில் தான் மறைப்பணியாளராக (Missionary) இருந்தபோது, 2017-இல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைக் குறிப்பிட்ட திருத்தநதை, "மீளக் கட்டியெழுப்புதல் என்பது வெறும் கட்டிடங்களை மீட்பது மட்டுமல்ல, மனித உறவுகளையும் நம்பிக்கையையும் புதுப்பிப்பதாகும்" என்றார். எருசலேமின் மதில்களைக் கட்டியெழுப்பிய விவிலிய மாந்தர் 'நெகேமியா'வை முன்மாதிரியாகக் காட்டி, இந்தத் டிஜிட்டல் யுகத்தின் ஒழுக்கநெறிகளைக் கூட்டுமுயற்சியோடு நாம் கட்டமைக்க வேண்டும் என்றார்.

புனித ஆறாம் பவுல் அடிகளாரின் போதனையை நினைவு கூர்ந்த திருத்தந்தை, உண்மை வளர்ச்சி என்பது "ஒவ்வொரு மனிதரையும் மற்றும் முழு மனிதரையும்" உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றார். மனிதர்களை வெறும் "உற்பத்தித் திறன்" அல்லது "தரவுகளாக" (Data) மட்டும் சுருக்கிவிட முடியாது.

"ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஓர் சுதந்திரமும், ஆன்மீகமும், அன்புகூரும் மற்றும் இறைவனை வழிபடும் அழைப்பும் உள்ளது. அதை எந்தவொரு எந்திரததாலும் (Machine) மாற்றவோ அல்லது தடுக்கவோ முடியாது."

### அன்பின் நாகரிகம் (Civilisation of Love)

இந்தத் தொழில்நுட்ப மாற்றங்கள் ஒரு சில தனிச்சலுகை பெற்றவர்களுக்கு மட்டும் பயன்படாமல், முழு மனித குடும்பத்திற்கும் பயன்படுவதை நாடுகள் மற்றும் நிறுவனங்களின் கூட்டுமுயற்சி உறுதி செய்ய வேண்டும் என்று திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

விசுவாசிகள், விசுவாசமற்றவர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து "அன்பின் நாகரிகத்தை" வளர்க்க உழைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். எளியோரை உயர்த்தும் இறைவனைப் போற்றிப் பாடிய அன்னை மரியாவின் 'magnificat' (ஆண்டவரை எனது ஆன்மா போற்றிப் பெருமைப்படுத்துகின்றது) பாடலை நினைவு கூர்ந்து, இந்த முயற்சியை அன்னை மரியாவிடம் ஒப்படைத்துத் திருத்தந்தை செபித்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

## புனித பியூவின் 'துன்பத்தைப் போக்கும் இல்லத்தை' மறுசீரமைக்க திருத்தந்தை புதிய குழுவை அமைத்தார்

புனித பியூ (Padre Pio) அவர்களால் இத்தாலியின் சான் ஜியோவானி ரோட்டோண்டோவில் தொடங்கப்பட்ட 'துன்பத்தைப் போக்கும் இல்லம்' (Casa Sollievo della Sofferenza) என்ற அறக்கட்டளையை மேம்படுத்தவும், அதன் பணிகளைத் துரிதப்படுத்தவும் திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள் ஒரு புதிய உயர்மட்டக் குழுவை அமைப்பதற்கான அதிகாரப்பூர்வ ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

புனித பியூவின் கனவுத் திட்டமாகத் தொடங்கப்பட்ட இந்த இல்லம், இத்தாலியின் மிக முக்கியமான மருத்துவ மையங்களில் ஒன்றாகும். தற்போது இந்த நிறுவனம் ஒரு புதிய மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தயாராகி வருகிறது.

இந்த மருத்துவமனையின் செயல்திறனை அதிகரிக்கவும், அதன் எதிர்காலத்தைச் சீராகக் கொண்டு செல்லவும், திருத்தந்தை 14-ஆம் லியோ 'வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வைக் குழு' ஒன்றை அமைத்துள்ளார். இக்குழு இந்த அறக்கட்டளையின் தற்போதைய நிலையை ஆராய்ந்து, சிறந்த தீர்வுகளை வழங்கும்.

அன்புப்பணிகளின் மீது திருஅவை கொண்டுள்ள அக்கறையினாலும், ஒரு நிறுவனம் தனது இலக்கைச் சரியாக அடைய வேண்டுமானால் காலத்திற்கேற்ப மாற வேண்டும் என்ற நோக்கத்தினாலும் திருத்தந்தை இந்த முடிவை எடுத்துள்ளார்.

திருத்தந்தை தனது ஆவணத்தில் குறிப்பிட்டது போல:

"கால மாற்றம், தொழில்நுட்ப வளர்ச்சி, சட்டம் மற்றும் பொருளாதார சூழல்கள் ஆகியவை திருஅவையின் பணிகளுக்குப் புதிய சவால்களைத் தருகின்றன. குறிப்பாக மருத்துவத் துறையில் தொலைநோக்குப் பார்வையும், முதலீடும், முறையான நிர்வாகமும் மிகவும் அவசியம்."

புனித பியூவின் ஆன்மீக வழிகாட்டுதலின்படி, நோயாளிகளுக்கும், திருப்பயணிகளுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் அன்பான பராமரிப்பும் உதவியும் வழங்கவே இந்த இல்லம் நிறுவப்பட்டது. அந்த உன்னத நோக்கம் சிதையாமல் இருக்கவே இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

### புனித பியூவின் கனவு நனவாகிறது


உடலைப் பராமரிப்பது கிறிஸ்தவப் பணியின் ஒரு பகுதி என்பதில் புனித பியூ அவர்கள் உறுதியாக இருந்தார். அவரது அந்த ஆழமான விசுவாசத்திலிருந்தே இந்த 'துன்பத்தைப் போக்கும் இல்லம்' பிறந்தது.

பல தசாப்தங்களுக்குப் பிறகு, புனித பியூவின் அந்த எண்ணம் இன்றும் மாறாமல் இருப்பதை திருத்தந்தை 14-ஆம் லியோவின் இந்த நடவடிக்கை உறுதிப்படுத்துகிறது. எந்தவொரு நோயாளியும், திருப்பயணியும் ஆதரவின்றித் தவிக்கக் கூடாது என்ற புனித பியூவின் கருணையைத் திருத்தந்தை இதன் மூலம் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த மறுசீரமைப்பு என்பது புனித பியூவின் புனிதமான பணிக்கும், அங்குக் குணமாகவும் நம்பிக்கையுடனும் வரும் ஆயிரக்கணக்கான மக்களுக்கும் செய்யும் ஒரு நற்செயலாகும்.

தமிழாக்கம் ஹெரால்டு

## கண்ணீர் அஞ்சலி!



மறைந்த அருட்தந்தை அந்தோனி பிள்ளை அவர்களுக்கு,

இசையின் மைந்தனாக,
மக்களின் குருவாக
இறைபணியாற்றிய இனிய நல்
குருவே!
இறைவனின் தூய
சேவைதன்னில்
இமயமாய் வாழ்ந்து, இன்னுயிர்
தந்தாயே.
பத்து வயதில் மரணம் உன்னை
அழைத்தாலும்,
எழுபத்துமூன்று ஆண்டுகளை ஆசீராக பெற்று,
நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளராய் வாழ்ந்து
இறைவனின் மகிழ்ச்சியில் பங்கு கொண்டீர்.
ஆயனைப் போல மக்களை நேசித்து,
ஆன்மீக வாழ்வில் மகுடம் சூடி
ஆபிரகாமின் மடியில் அமைதி காண
ஆவலோடு விரைந்து சென்றீரோ?
கண்ணின் மணிபோல தாயைக் காத்த,
கடமையில் தவறாத உத்தம மகன்நீரே.
மண்ணில் இருந்து மறைந்து போனாலும்
மக்கள் மனங்களைவிட்டு மறையவில்லை.
சோதனைகளும், வேதனைகளும் பின்தொடர,
சாதனைப்படைத்து வெற்றி கண்டீர்.
தூய சேவையும், நேர்மையும் கொண்டு
தாயின் கனவுக்கு உயிர் கொடுத்தீர்.
விண்ணகத்து தூதர்கள் விரைந்து வந்து,
உங்கள் புனித ஆன்மாவை ஏற்று,
உன்னை கடவுளிடம் சேர்த்திட
கண்ணீரைத் தந்தேன் காணிக்கையாக.

கவியரங்கம்.
எஸ். வெரோணிக்கா
நிபோங் திபால்

## 'சாய்ஸ் தமிழ்' இளையோர் தியானம் மீண்டும் தொடக்கம்!

மலாக்கா-ஜொகூர் மறைமாவட்ட இளையோர் பணிக்குழுவின் (MJDYPN) கீழ், 'சாய்ஸ் தமிழ் - 19' தியானக் கூட்டம் கடந்த மே 8 முதல் 10 வரை மாஜோடி மையத்தில் (Majodi Centre) வெற்றிகரமாக நடைபெற்றது. விசுவாசம், தோழமை மற்றும் ஆன்மீகப் புதுப்பித்தல் நிறைந்த இவ்விழா, 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஜொகூரில் மீண்டும் தொடங்கப்பட்டு ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.

- கோலாலம்பூர் சாய்ஸ் தமிழ் (CTKL) குழுவின் வழிகாட்டுதலுடன் இஃது சாத்தியமானது. அங்கிருந்து வந்த 5 நெறியாளர்கள் தங்களின் வாழ்வியல் சாட்சியங்களைப் பகிர்ந்துக் கொண்டனர்.
- அருட்சகோதரி மேரி, அருட்சகோதரி சாந்தி மற்றும் அருட்தந்தை சிறில் ஆகியோரின் ஆன்மீக வழிகாட்டுதல் இந்நிகழ்வை அர்த்தமுள்ளதாக்கியது.
- சுமார் 10 தன்னார்வலர்களின் பல மாத உழைப்பும் தியாகமும் இம்முயற்சியின் வெற்றிக்குக் காரணமாயின.
- தெற்கு ஜொகூர், வடக்கு ஜொகூர் மற்றும் மலாக்கா வட்டாரங்களிலிருந்து 28 இளையோர் கலந்துகொண்டு இறைஅனுபவத்தைப் பெற்றனர்.

இந்த மறுதொடக்கம் வெறும் நிகழ்வல்ல; மாறாக செபத்தினாலும் ஒற்றுமையினாலும் நீண்ட நாள் கனவுகளும் நனவாகும் என்ற இறைநம்பிக்கையின் அடையாளம் ஆகும்.






தனிப்பட்ட சாட்சியப் பகிர்வு

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கோலாலம்பூர் 'சாய்ஸ்' தியானத்தில் பங்கேற்றபோது என் வாழ்க்கை மாறியது. அது தந்த அமைதியும் இறைஅன்பும், இத்திட்டத்தை மீண்டும் ஜொகூரில் தொடங்க வேண்டும் என்ற கனவை எனக்குள் விதைத்தது.

சவால்கள், போராட்டங்கள் மற்றும் சாத்தியமற்ற சூழ்நிலைகளை கடந்த இப்பயணத்தில் இறைவனின் பேரன்பு என்றும் துணையிருந்தது. ஈராண்டுகள் காத்திருப்புக்குப் பின், அக்கனவு நனவானது! நான் பெற்ற அதே இறைமகிழ்ச்சியையும் அமைதியையும் பிற இளையோரும் பெறுவதைக் கண்டபோது, அனைத்து தியாகங்களும் அர்த்தமுள்ளதாக மாறின.

எங்களோடு பயணித்த அனைவருக்கும் நன்றிகள். சாத்தியமற்றதைச் சாத்தியமாக்கிய இறைவனுக்கே எல்லா புகழும் மகிமையும் என்றென்றும் உரித்தாகுக!

ஆண்ட்ரா ஆன் (CTKL 50)
அதிகாரப்பூர்வப் பிரதிநிதி, CHOICE Tamil MJDYPN

## மகிழ்ந்திட வாழ்க்கையின் நிறைவே, இறைவா!

இந்நாள் ஓர் எளிய நாளல்ல,
இந்நாள் ஓர் அருள் நிறை நாள்.
இந்நாள் இறைவன் தேர்ந்த நாள்
இந்நாள் மலேசிய மண்ணில்
இறைப்பணிக்கு தன்னை
அர்ப்பணித்த
பொன்னாள்!

பலிபீடத்தின் முன்
இதயம் ஒன்று பணிந்து நிற்கிறது;
அந்த இதயம் முழுமையாவே
கிறிஸ்துவுக்கே சொந்தமாகிறது!

கரங்களில் திரு எண்ணெய் ஏற்றே
இதயத்தில் இறையன்பு
ஊற்றெடுக்க
நம்பிக்கையாளரை வழிநடத்தும்
நல்லதொரு ஆயனாக
நீர் எழுகிறாய் திருப்பணி
சேவகனாய்!
இனி உன் கரங்கள்
திருப்பீடத்தில் அப்பத்தை
உயர்த்தும்;
இனி உன் குரலோ
இறை வார்த்தையை அறிவிக்கும்!

காயமடைந்த இதயங்களுக்கு
கருணையின் குரலாய் இருப்பாய்;
நம்பிக்கை தேடும் ஆன்மாக்களுக்கு
ஒளியாக நீர் விளங்குவாய்!

துவளாதே,
அருள்பணி பாதை கடினமாகவும்
இருக்கும்,
அதன் சுமை கனமாகவும்
இருக்கும்,
ஆனால் உன் பாதையில்
ஒரு குரல் என்றும் ஒலிக்கும்ஷ
"அஞ்சாதே!
உலக முடிவுவரை
நான் உன்னோடு இருப்பேன்"
என்றே!

அந்த வாக்குறுதி
உனக்கு திடமாகவும் இருக்கும்;
அந்த வாக்குறுதி
உன் பணியின் ஒளியாகவும்
இருக்கும்.

அன்புச் சகோதரனே,
அருட்பணி பிலிப் ஆசீர்வாதம் ,
அருட்பணி ரோபர்ட் அந்தோனி
ஆகியோரே!
இன்று நீ தேர்ந்தெடுக்கப்பட்டவன்;
இன்று நீ அர்ப்பணிக்கப்பட்டவன்;
இன்று நீ கிறிஸ்துவின்
பணியாளன்!

ஆண்டவர் உம்மை வழி
நடத்தட்டும்,
அவர் அருள் உன் வாழ்வை
நிரப்பட்டும்;
உன் அருட்பணி வாழ்க்கை
முழுவதும்
இறைவன் அன்பு ஒளிரட்டும்.
ஏனெனில் இன்று, இங்கே,
இந்த அருள் நிறைந்த
தருணத்தில்
ஆண்டவர் மீண்டும் சொல்கிறார்—
"உலக முடிவுவரை
நான் உன்னோடு இருப்பேன்" என்று.
(மத் 28:20).

அருட்பணி பிலிப் ஆசீர்வாதம்
மற்றும் அருட்பணி ரோபர்ட்
அந்தோனி ஆகிய இருவருக்கும்
எனது மனமார்ந்த 'குருத்துவ
திருநிலைப்படுத்தல்'
நல்வாழ்த்துகள்

அருட்பணி வின்சண்ட் தோமஸ்
புனித தோமா அக்வினா பாப்பிறை
பல்கலைக்கழகம் (அஞ்செலிக்கும்)
உரோமை, இத்தாலி

## கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம் பெருவிழா 07-06-2026

**இணைச்சட்டம் 8: 2-3, 14b-16a; திபா 147: 12-13. 14-15. 19-20; 1 கொரிந்தியர் 10: 16-17; யோவான் 6: 51-58**

### "வாழ்வு தரும் உணவு நானே"

கிறிஸ்துவில் அன்பான உறவுகளே, இன்று நாம் கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். பாஸ்கா காலக் கொண்டாட்டங்களின் நிறைவாக நாம் இந்தப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம்.

இயேசுவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவை ஏற்படுத்துவதற்கு முன், சில அருள்பணியாளர்களுக்கு ஏற்பட்ட அற்புதங்களே இந்த விழாவைக் கொண்டாடக் காரணமாகும். மிகவும் குறிப்பிடத்தக்க அடையாளமாக, கிபி700 ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் உள்ள லான்சியானோ என்ற இடத்தில் நிகழ்ந்த அற்புதம் தான். அருள்பணியாளர் திருப்பலியை நிறைவேற்றிக்கொண்டிருந்தபோது, சாதாரண அப்பம் ஒரு சதைத்துண்டாக மாறியது. ஆராய்ச்சியாளர்களின் ஆய்வு பல கருத்துகளை முன்வைத்தது. இது ஒரு இதயத்தினுடைய சதைப்பகுதி என்றும் இதனுடைய இரத்தபிரிவு AB+ பிரிவு என்றது மட்டுமல்லாமால், இயேசுவை அடக்கம்செய்யப்பட்டிருந்த துகிலில் உள்ள இரத்தவகையும் ஒன்றே என்று மெய்ப்பிக்கப்பட்டது. அதன்பின் 1264 ஆம் ஆண்டில் திருத்தந்தை ஆறாம் அர்பன் இந்த விழாவை அதிகாரப்பூர்வமாக ஏற்படுத்தினார்.

முதல்வாசகத்தில் மோசே தாம் கண்ணால் கண்ட மன்னாவைப் பற்றி இஸ்ரயேல் மக்களிடம் மீண்டும் நினைவூட்டுகிறார். நம் விண்ணகத் தந்தையே, அந்த உணவைப் பாலைவனத்தில் உண்ணக் கொடுத்தார். ஆனால் அதை உண்ட மக்கள் இறந்துபோயினர். அவர்கள் நிறைவடையவில்லை.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் உண்மையான மன்னாவைப் பற்றிக் கூறுகின்றார். ஒவ்வொரு முறை திருப்பலியில் நற்கருணையைப் பெற்றுக்கொள்ளும் நாம், சாதாரண அப்பத்தை அல்ல, இயேசுவையே பெறுகிறோம். ஆனால் எந்த நிலையில் பெறுகிறோம்? உண்மையான தயாரிப்பா, உண்மையான உள்ள மாற்றமா? அல்லது வெறும் சடங்கா? நாம் நம்மையே ஆராய்ந்து பார்ப்போம். நாம் நற்கருணையைப் பெற்றபின் அவராக



மாறவேண்டும். ஆனால் என் வாழ்வும், வார்த்தையும், செயலும் இயேசுவைப் பிரதிபலிக்கிறதா?

நற்செய்தியில் இயேசு கூறிய உண்மையான சதை என்பதை அங்கிருந்த அனைவராலும் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. மனித இறைச்சியை எவ்வாறு உண்பது. நாம் மனிதக் கண்ணால் அல்ல, ஆன்மீக அறிவினால் மட்டுமே இதை உணரவும், ஏற்றுக்கொள்ளவும் முடியும். முற்காலத்தில் மீண்டும் மீண்டும் பாவப்பரிகாரப்பலியாக ஆட்டுக்குட்டிகள் பலியாக்கப்பட்டாலும் பாவம் கழுவப்படவில்லை. இயேசு அதை முற்றிலும் ஒரேமுறையாகப் பலியாக்கினார். அவரே, அந்த உயிருள்ள புதிய மன்னா, பலியிடப்பட்ட உண்மையான செம்மறி. இதனால் நாம் கழுவப்பட்டோம். பாவத்தைப் பொறுத்தமட்டில் நாம் இறந்து, இயேசுவில் அவருடைய உடலாலும் இரத்தத்தாலும் மீண்டும் விலைகொடுத்து வாங்கப்பட்டோம்.

ஒவ்வொருமுறை திருப்பலியில் பங்குபெறும்போது, வானத்தூதர்களுக்கும் கிட்டாத மகா உன்னதமான பேறு நமக்கு அருகில் உள்ளது என்று உணர்ந்து தகுந்த தயாரிப்போடும், உள்ள மகிழ்ச்சியோடும், மாபெரும் நன்றியுணர்வோடும் இயேசுவின் உடலை அந்த உன்னதமான புனித நற்கருணையை உளமாரப் பெறுவோம். அவரால், அவராக மாறுவோம்.

ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.